## சென்னை மெட்ரோ ரெயிலில்

# இதுவரை 3.81 கோடி பயணிகள் பயணம்

சென்னை, மே.15–

சென்னை மெட்ரோ ரெயில் சேவையை கடந்த 2015–ம் ஆண்டு ஜூன் 29 முதல் சென்னையில் துவங்கியது. இதுவரை சென்னையில் உள்ள மக்களுக்கும் மற்றும் அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில்பணியாற்றுபவர்களுக்கும் சென்னை மெட்ரோ ரெயில் ஒரு நம்பகமான பாதுகாப்பு போக்குவரத்து வசதியை தந்து வருகிறது.



இதை தவிர்த்து இணைப்பு போக்குவரத்து வசதிகளும் வாகனம் நிறுத்துமிட வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. தற்போது சில மெட்ரோ நிலையங்களில் இயங்கிக் கொண்டு இருக்கும் ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி, சேவைகள் விரைவில் அனைத்து 32 மெட்ரோநிலையங்களிலும் துவங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

சென்னை மெட்ரோ ரெயில் சேவைகளை துவங்கியதிலிருந்து நாளுக்கு நாள் பயணிகளின் எண்ணிக்கை சீராக அதிகரித்து வருகிறது.

இதுவரை மொத்தம், 3,81,03,799 பயணிகள் மெட்ரோ ரெயிலில் கடந்த 2015 ஜூன் 29 முதல் நேற்று (2019 மே 14–ம் தேதி) வரை பயணித்துள்ளார்கள்.

கடந்த 26.04.2019 அன்று மொத்தம் 102790 பயணிகள் மெட்ரோரெயில்சேவையை பயன்படுத்தியுள்ளனர். இதேபோல், கடந்த 06.05.2019 அன்று மொத்தம் 92,917 பயணிகளும், 10.05.2019 அன்று மொத்தம் 95,119 பயணிகளும் பயணித்துள்ளனர்.